*(திருமறை ஆய்வு)*

# *அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு - ஓர் இரகசிய சீடர்: புதிய சீடத்துவத்துவத்துக்கான முன்னோடி*

*(மத். 27:57-61, மாற்கு 15:42-47, லூக். 23:50-56, யோ. 19:38-42)*

அருள்திரு. முனைவர். சாலமன் விக்டசு

*அரிமத்தியா ஊரைச்சார்ந்த யோசேப்பு ஒரு யுத தலைமைச் சனகரின் சங்க உறுப்பினர். நான்கு நற்செய்தி நூற்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கியமான நபர். இவர் இயேசுவின் வாழ்வில் எப்படி இடம் பெற்றார் என்பதை ஆழமாகத் தெரியும் வண்ணம் விவிலியம் வழி தொகுப்பதில் நான் மகிழ்கிறேன். இவர் ஒரு தலைமைச் சனகரின் சங்க உறுப்பினராக இருந்தாலும் அவர்களின் கொள்கைகளுக்கும், செயல்பாடுகளுக்கும், சதித்திட்டத்திற்கும் பெரிதும் இணங்காதவராகவே வாழ்ந்தார். அவர்களின் திட்டங்களோடு எந்த விதத்திலும் சமரசம் செய்யாமல் வாழமுனைந்த ஒரு நபராக அவரைப் பார்க்கலாம். நல்லவராக, நேர்மையாளராக ஒரு அநீதியான கும்பலின் நடுவே அவர் வாழ முனைந்து, வெற்றிபெற்றவர் எனக்காணலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுநாதர் அறிவித்த, இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர் என்றக் குறிப்பையும் விவிலியம் நமக்கு கொடுக்கிறது (மாற்கு 15:43). அப்படியானால் எந்த அளவு யுத சமயச் சங்கத்திலிருந்து அவர் வேறுபட்டு நின்றார் எனக் காணலாம்.*

*இயேசுநாதர் வாழ்ந்த நாட்களில் ஒரு தலைமை சனகரின் சங்க உறுப்பினராக தான் இயேசுவைப் பார்க்க, பேச ஆவல் கொண்டிருந்தாலும், யூதர்களிடம் தன்னை ஓர் இயேசுவின் சீடர் என்பதை வெளிப்படையாக காட்டிக்கொள்ள விரும்பவில்லை (யோ.19:38). அநீதியான அமைப்புகளின் நடுவே மாட்டிக் கொள்ளும் ஒரு நல்லவரின் வாழ்வு எப்படி இருந்திருக்கும் என்பதற்கு அரிமத்தியா யோசேப்பு ஒரு மாதிரியாக வாழ்ந்தார் எனலாம். இவர் ஓர் இரகசிய சீடர் மட்டுமல்ல, ஒரு செல்வந்தர் (மத். 27:57). எரேமியாஸ் விளக்கக் குறிப்புப்படி அதிக நிலங்களை வைத்திருந்த ஒரு செல்வந்தராகக் காட்டப்படுகிறார். ஒருவேளை செல்வந்தராக இருந்ததாலேயே என்னமோ யூதர்கள் இவரை சனகரின் அதிகாரப் பீடத்தில் உறுப்பினராக வைத்திருந்திருக்கலாம். இயேசுவைக் கொலைச் செய்ய திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் போதே சிலர் தனிமையாக அந்த குழுவினரிடம் போராடி எதிர்த்திருக்க வேண்டும், வாதாடியிருக்க வேண்டும். ஆனால் நற்செய்தி நூற்களில் அது குறித்த செய்திகள் ஏன் கசியவில்லை என்பதுதான் தெரியவில்லை. இந்தப் போராட்டத்தில் இயேசுநாதரை காப்பாற்ற முடியாத ஆதங்கத்தின் வெளிப்பாடாக யோசேப்பின் செயல்கள் பின்னர் வெளிப்பட்டன. இன்னும் தொடர்ந்து தன்னை இயேசுவின் இரகசிய சீடனாக வைத்திருக்க விரும்பவில்லை. பிலாத்துவிடமும், உரோமை அரச பிரதிநிதிகளிடமும் பல சமய அதிகார வர்க்கத்தினர் மண்டியிட்டு அதிகார மன்றத்தில் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, இயேசுவை மறுதலித்துக் கொண்டிருந்தபோது, தைரியமாக, துணிவோடு, வெளிப்படையாக பிலாத்துவிடம் சென்று கொலைசெய்யப்பட்ட இயேசுவின் உடலைக் கேட்டார் (மாற்கு 15:43). இது ஓர் அசாதாரணமான தைரியம் அல்லவா! சனகரின் சங்க உறுப்பினராக இருந்ததாலேயே என்னமோ அவருக்கு அனுமதியும் கிட்டியது. உடலைப்பெற்று மெல்லியத்துணியால் அதனைச் சுற்றி தனக்காக ஆயத்தப்படுத்தப்பட்ட கல்லறையில் உடலைப் படுக்கச்செய்தார் (மத். 27:60). உடலை வைத்தபின்னர் கல்லறை வாயிலை ஒரு பெருங்கல்லால் உருட்டி மூடி பாதுகாப்பாக்கினார்.*

*இங்குதான் பரிசேயராகிய நிக்கேதேமும் இவரோடு கைகோர்த்து இயேசு பெருமானின் உடலின் இறுதிச்சடங்கை மிக நிறைவான விதத்தில் செய்து முடிந்திருந்தனர் என்றச் செய்தி வருகிறது. இந்த நிக்கேதேமு இயேசுவை இரகசியமாக பின்பற்றி வந்த இன்னொரு சீடர் என்பது நற்செய்தி நூற்களின் பல குறிப்புகளிலிருந்து நமக்குத் தெரிய வருகின்றன. இவர் யூதர்களின் ஆட்சிமன்றக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தவர். இவர் யூதர்களில் தலைவராக இருந்தது மட்டுமன்றி நீதிச்சட்ட போதனை செய்யக்கூடிய கல்வித்தகுதி பெற்றிருந்தவர். எனவே அன்றைய அரசியல் சூழலில் நேரடியாக பகலில் இயேசுவுடன் பேச விரும்பாமல் இரவில் அவரிடம் சென்று இயேசுவின் போதனைக் குறித்த தெளிவு பெறச் சென்றவர். வாதம் செய்தவர்; ஆண்டவரின் கண்ணோட்டத்தை புரிய முனைந்தவர் (யோ.3:1 தொடர்ச்சி). இவர் இயேசுவோடு வாதம்செய்து அவரைப்புரிய முனையும் அதே வேளையில், யூதத்தலைமைக் குருக்களோடும், பரிசேயரோடும் வாதம்செய்து இயேசுவின் சார்பாக பேசியதையும் சில குறிப்புகளில் காண முடிகிறது (யோ.7:48-52).*

*அரிமத்தியா ஊரைச்சேர்ந்த யோசேப்பும், பரிசேயரான நிக்கேதேமும் யூதர்களது ஆளும் மன்றங்களில் பொறுப்பு வகித்துக்கொண்டே, இயேசுவைச் சார்ந்த நிலைப்பாடு எடுக்கத் துணிந்தவர்கள். இருவரும் இயேசுவுக்காக தங்கள் சக அதிகாரிகளோடு வாதிடும் நபர்களாக இருந்ததால், இருவரும் இணைந்து நண்பர்களாயிருந்திருக்கலாம் (யோ.19:38). எனவேதான் இயேசுவின் உடலைப் பெற்ற பின்னர் வெள்ளைப்போளமும், சந்தனத்தூளும் கலந்த முப்பது கிலோ நறுமணத்தை இருவரும் சேர்ந்து ஆண்டவரின் உடலில் தடவி, துணியால் கட்டினர் என்றக் குறிப்பு உள்ளது (யோ.19:39). இவர்கள் இருவரின் நிலைப்பாடுகளும், செயல்பாடுகளும் பல கேள்விகளையும், அறைகூவல்களையும் நம்மிடையே எழுப்புகின்றன. இவர்கள் இருவரின் அரசியல் நிலைப்பாடுகள் என்ன? அதிகார வர்க்கத்துக்குள்ளேயே இருந்து போராடிக்கொண்டே, இயேசுவின் ஒரு புதிய சீடத்துவத்தை பின்பற்ற முனைந்தார்களா? இவர்களது செயல் ஓர் எளிய செய்தியா? என்பனவற்றை கீழ்க்கண்டக் குறிப்புகளை மையமாகக் கொண்டு விவாதத்திற் குட்படுத்திப் பார்க்கலாம்.*

1. *அமைப்புகள் மனிரால் உருவாக்கப்பட்டவை என்பது நமக்குத் தெரியும். அமைப்புகள் இல்லாத வாழ்வுக்கான வாய்ப்புகள் உள்ளனவா? அமைப்புகள் அனைத்தும் கெட்டவையா? ஒருவர் நீதிகெட்டதொரு நிர்வாகத்தில் இருந்துகொண்டே நல்லவராக அவர் தொடர வாய்ப்புகள் உள்ளனவா? தீமையை விளைவிக்கும் ஒரு கெட்ட அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவரும் கெட்டவர்களா? இன்றைய அரசியல் கட்சிகளில் பொதுவாக அதிகாரத்துக்கான தேடுதல் அதிகம் உள்ளன. நேச அணிகளை யார் எப்படி தெரிவு செய்கின்றனர் என்பதும் இதுபோன்ற கேள்விகளிலிருந்து தப்ப முடியாது. பாரதிய சனதா கட்சியில் சிறுபான்மையினரான (மறைந்த) இராம் விலாஸ் பாஸ்வான், கிருஷ்ணசாமி, முக்தர் அப்பாஸ் நக்பி, அல்போன்ஸ், குஸ்பு போன்றோர்களை இவர்களோடு ஒப்பிட்டு பார்க்க முடியுமா?*

2. *பன்மை அடையாளங்களைக்* (multiple identities) *கொண்ட ஒருவரை எப்படி தீர்ப்பிட முடியும்? ஒருவர் செல்வந்தராக, ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவராக, திருச்சபைகளுக்கு அதிக பண உதவிசெய்பவராக இருப்பவர், நீதிமானாக ஒரே நேரத்தில் இருக்க முடியுமா? இன்னொருவர் சாதாரண ஏழையாக, கமல் அல்லது சீமான் இரசிகராக, உதவும் எண்ணம் கொண்டவராக, நீதியராக ஏன் இருக்க முடியாதா? யார் யாரைத் தீர்ப்பிடுவது? எதன் அடிப்படையில் ஒருவரின் நற்குணத்தை தீர்மானிப்பது?*

3. *குழுவாக எடுக்கும் தீர்மானங்களின் விளைவுக்கு குழு உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றுபோல பொறுப்பாளிகளாக ஆக்கிவிட முடியுமா? ஏகமனதாக* (unanimous) *எடுக்கும் தீர்மானத்திற்கும், பெரும்பான்மையர் எடுக்கும் தீர்மானத்திற்கும் வேறுபாடு உள்ளதா? இல்லையா? ஒரு கட்சிக்குள்ளே மாறுபட்ட கருத்து கூறுவோரை நம் சமூகம் எப்படிப் பார்க்கப் பழகியிருக்கிறது? துரோகிகள், காட்டிக்கொடுத்தோர் என யாரைக் கூறுகிறோம்? மக்களாட்சி என்றப் பெயரில் 30 விழுக்காடு ஆதரவு பெற்றவர்கள் எப்படி ஆட்சியை அமைக்கமுடிகிறது? உண்மையாகவே அவர்களை பெரும்பான்மையினரின் அனுமதியைப் பெற்றவர் எனக் கருத முடியுமா? பெரும்பான்மையர் எடுக்கும் தீர்மானத்தை ஒருவர், இருவர் எதிர்ப்பதால் என்ன நடக்கும்? எடுக்கப்பட்ட தீர்மானங்களை அனைவரும் ஏற்றுக்கொண்டதாகக் கருதமுடியுமா?*

4. *திருச்சபையின் உறுப்பினர்கள்தான் இயேசுவின் சீடர்களாகிவிட முடியுமா? இயேசு வாழ்ந்த காலத்திலேயே அவரது சீடர்களாக இருந்தோர் பலர் அவரை மறுதலிப்பதிலும், காட்டிக் கொடுப்பதிலும், அதிகார நாட்டம் கொள்வதிலும் தீவிரமாக ஈடுபட்டனர். ஆனால் புதிய சீடர்களும் இயேசுவின் இயக்கத்தைச் சார்ந்த அமைப்பினரே. புதிய சீடர்கள் இயேசுவின் சாவு நேரத்திற்கான திட்டம் வகுக்கப்பட்ட நேரம் முதல் தாங்கள் இருந்துவந்த எதிர்மறையான நிறுவன அமைப்புகளில் இருந்துகொண்டே, வெளியே வந்து இயேசுவுக்கு சார்பாக பேச ஆரம்பித்தனர். பழைய சீடர்கள் பின்வாங்குவதிலும், புதிய சீடர் சாட்சியாக வெளிப்படையாக முன்வருவதிலும் காண முடிந்தது. உரோம நூற்றுக்கதிபதியின் சாட்சி (15:39), பல யூத குடும்பப் பெண்கள், தலைமை குருக்களின் காவலர்கள் (யோ.7:45-46), உரோம நூற்றுவர் தலைவர், பரிசேயரான நிக்கேதேமு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு - இவர்கள் அனைவரும் நமக்கு புதிய சீடத்திற்கான வழியைக் காட்டியவர்கள். ஆண்டவரிடம் நிரந்தர சீடராக வாழ்வது மிகக்கடினம். எனவேதான் அவர் ஒருமுறை கூறினார், 'நீங்கள் புகழாவிட்டால், இந்தக் கற்கள் புகழும்' என்றார் (லூக். 19:39-40). அழைக்கப்பட்டோர் பலர், தெரிந்துகொள்ளப்பட்டோர் சிலர் (மத்.22:14).*

*எப்படிப்பட்டக் கேள்விகளை எழுப்பித் துளைத்தாலும், அரிமத்தியா யோசேப்பின் செயலான, மாண்பு மரியாதையுடன் நல்லடக்கம் செய்த நிகழ்வு ஒப்பிட முடியாத ஒரு நற்செயலாகும். யூத தலைமைக்கும், சிலுவையில் தொங்கும் இயேசுவின் உடலை எப்படி அகற்ற ஏற்பாடு செய்வது என்ற குழப்பம் இருந்திருக்கலாம். ஓய்வு நாளில் உடலை தொங்கவிட்டால் தீட்டாகிவிடுமே என்ற கவலையும் சமயத்தலைமைக்கு பெரிதாகப்பட்ட நேரத்தில் அரிமத்தியா யோசேப்பின் வேண்டுகோள் இதமாகப்பட்டது. பொதுவாக உரோம சிலுவை மரண வரலாற்றில் பலிக்கடாக்களாக இறந்தோர் உடல்கள் வெளியே வீசப்பட்டு கழுகுகளுக்கும், பறவைகளுக்கும், நரிகளுக்கும் இரையாவதுண்டு. அதை இந்த யோசேப்பு தவிர்க்க முடிவு செய்தார். மாண்புடன் நல்லடக்கம் செய்ய முனைந்து செயல்பட்டார். போராட்டம் ஆர்ப்பாட்டம் செய்து, கதறி, கூச்சலிட்டு, ஆரவாரம் செய்யாமல், அவர் சிந்தித்து இயேசுவுக்கு என்னால் எப்படிப்பட்ட மாண்புமிக்க இறுதி மரியாதை செய்வது, நல்லடக்கம் நடத்துவது என்பதில் நிதானமாக ஈடுபட்டார். நம்முடைய வாழ்வில் அமைதியாக செயல்பட்டு புதிய சீடத்துவத்தை கற்றுக்கொள்ள அரிமத்தியா யோசேப்பின் வாழ்வு நம் அனைவருக்கும் பெரும் அறைகூவலாக உள்ளது.*